# O.S. No. 488 / 2021

# 21.12.2022

**வ.த.சா.1, திருமதி. ஜோதி, க/பெ. பார்த்திபன்**

சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதித் தரப்பில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது சகோதரர் தேவராஜ் பிரதிவாதியை திருமணம் செய்வதற்கு முன்பாக தாவா சொத்தில் 3 மாடி கட்டிடம் இருந்தது என்றால் சரிதான். எனது சகோதரர் தேவராஜின் சம்பளத்தை எங்களது தகப்பானரிடம் கொடுத்து வந்தார் என்றால் சரியல்ல. எனது சகோதரரின் சம்பளத்தை இரண்டாம் வாதியிடம் கொடுத்து அதன் பேரில் தாவா கட்டிடத்தில் 2 மற்றும் 3 வது தளங்கள் கட்டப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் தேவராஜை எப்போதும் தாவா இடத்தை காலி செய்ய சொன்னதில்லை. எனக்கு இரண்டாம் வாதி செட்டில்மென்ட் எழுதிக்கொடுத்த விவரம் எனது மற்ற சகோதரிகளுக்கு தெரியாது. 08.08.2001 அன்று சில சமூக விரோதிகளை வைத்து பிரதிவாதி மிரட்டியதாக நான் சொன்ன விவரத்திற்கு காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. அவ்வாறு பிரதிவாதி யாரையும் வைத்து மிரட்டவில்லை என்றாலும், வழக்கிற்காக தவறாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி தாவா சொத்தில் தற்போது அனுபவித்தில் உள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதியின் குழந்தை எனது சகோரரின் குழந்தை என்பதால், 2வது வாதி அந்தக் குழந்தையை தாவா சொத்திலிருந்து பராமரிக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கும் அவரது குழந்தைக்கும் தாவா சொத்தில் முழு உரிமை உள்ளது என்றாலும், அதன் காரணமாக 2 ஆம் வாதி என் பெயரில் தாவா சொத்துகளை பொறுத்து செட்டில்மென்ட் எழுதி வைத்தது செல்லாது என்று சொன்னால் சரியல்ல. தேவராஜிற்கு தாவா சொத்தில் உரிமை சித்தரித்துள்ளது என்றாலும், அதன் காரணமாக பிரதிவாதிக்கும அவரது குழந்தைக்கும் வாரிசு என்ற அடிப்படையில் தாவா சொத்தில் உரிமையுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் கணவரான தேவராஜ் 2வது வாதிக்கு மகன் என்பதாலும், தேவராஜ் இறந்துவிட்டதால், தேவராஜின் குடும்பமான மனைவி மற்றும் குழந்தையை பராமரிக்க 2 ஆம் வாதிக்கு

கடமையுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் மீது போடப்பட்ட தாவா வழக்கு சட்டப்படி செல்லக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.